# பல்கலைக்கழக மாணவர்களின் பொதுநலன் சார்ந்த ஒழுக்க ஈடுபாடு: இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட மாணவர்களை மையப்படுத்திய ஆய்வு

S.M.M. Mazahir[1], A.P.M. Asan[2], M.N. Husni Mohammad[3]. & M.S.F. Fasna[4]

[1234]Faculty of Islamic Studies and Arabic Language, South Eastern University of Sri Lanka.
mazahirsmm@seu.ac.lk, asanadam176@gmail.com, husninaseer96@gmail.com, m.s.f.fasna@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாம் ஒரு சமூகமயப்பட்ட வாழ்க்கைநெறியாகும். முஸ்லிம் சமூகத்தில் வாழும் ஒவ்வொரு தனிநபரும் பொதுநலன் பேணுபவராக இருக்க வேண்டும் என இஸ்லாமிய மூலாதாரங்கள் எதிர்பார்க்கின்றன. குறிப்பாக படித்த வர்க்கம் அதிலும் குறிப்பாக மார்க்கக் கல்வியை ஆழமாகப் படித்தவர்கள் இவ்விடயத்தில் முன்மாதிரிமிக்கவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தவகையில் பல்கலைக்கழகத்தில் கற்கும் மாணவர்களிடையே பொதுநலன் சார்ந்த ஒழுக்கங்களின் ஈடுபடுகை எவ்வளவு தூரம் இருக்கின்றது என்பதைக் கண்டறியும் நோக்கோடு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட மாணவர்களை மையமாக வைத்து, எட்டு சுட்டிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது, நீண்ட அவதானம் (முடிளநசஎயவழைெ) என்ற ஆய்வு முறைமையைக் கைக்கொண்டு, அதற்கான தரவுகள் கிட்டத்தட்ட 10 மாதங்களாக இரகசியமான முறையில் கண்காணித்துப் பெறப்பட்டன. பெறப்பட்ட முதலாம்நிலைத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டபோது மிகக் குறைந்தளவான மாணவர்களே பொதுநலன்சார் ஒழுக்கங்களில் ஈடுபாடு காட்டுவதும் மார்க்க அறிஞர்களினது கவனக்குவிப்பும் இவ்விடயங்களில் மிகக் குறைவாகக் காணப்படுவதும் பால் வேறுபாடோ மார்க்க அறிவு வேறுபாடோ இதில் செல்வாக்குச் செலுத்தாதிருப்பதும் ஆய்வின் முடிவாகத் தெரிய வந்தது. இந்நிலை ஒரு சமூகத்திற்கு ஆரோக்கியமாக இல்லாததனால் இளைய சமுதாயத்தினருக்கு பொதுநல ஒழுக்கங்களை ஊட்டுவதற்கான காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என இந்த ஆய்வு விதைந்துரைக்கின்றது.

**திறவுச் சொற்கள்:** இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடம், பொதுநலன்சார் ஒழுக்கங்கள், இஸ்லாம்

## அறிமுகம்

சர்வகலாசாலைகளில் கற்கின்ற மாணவர்கள் தமது அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்வதற்கு முனைப்புக் காட்டும் அதேவேளை தமது ஒழுக்கப் பண்பாடுகளையும் விருத்தி செய்து கொள்ள வேண்டும். குறிப்பாக இஸ்லாத்தை தமது வாழ்வுநெறியாகக் கொண்டவர்கள் இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்கள் நிரம்பப் பெற்றவர்களாக தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். அதிலும் பொது இடங்களில் வீண்விரயத்தையும் பிறருக்கு இடையூறு விளைவிப்பதையும் தவிர்ப்பதோடு பலவீனமானவர்களுக்கு உதவும் மனப்பான்மையும் கொண்ட பொது நலன் பேணுபவர்களாக இருக்க வேண்டும். அதிலும் விசேடமாக சன்மார்க்கக் கல்வியைக் கற்றவர்கள் இதில் கூடுதல் கவனம் செலுத்தி, பிறருக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

திருக்குர்ஆன், அஸ்ஸுன்னா பொதுநலன் பேணுதல் தொடர்பாக அதிகம் பேசியுள்ளன. உதாரணமாக: *"அல்லாஹ் தூய்மையானவர்களையும் சுத்தமானவர்களையும் விரும்புகின்றான்".* (அல்குர்ஆன், சூரா தௌபா:108) மேலும் *"நிச்சயமாக வீண்விரயம் செய்பவர்கள் ஷைத்தானின் சகோதரர்கள்...* (அல்குர்ஆன், சூரதுல் இஸ்ரா.:. 27) *என்று அல்குர்ஆனும் "ஈமான் 70 கிளைகளைக் கொண்டது. அதில் மிகவும் உயர்ந்தது லாஇலாஹ இல்லல்லாஹ் என்ற வார்த்தை ஆகும். அதில் மிகவும் தாழ்ந்தது பாதையில் உள்ள நோவினை தரக்கூடியதை அகற்றுவது ஆகும்."* (முஸ்லிம்), *பாதையிலிருந்து தீங்குவிளைவிக்கும் பொருட்களை அகற்றுவது உமக்கு தர்மமாக அமையும்"* (அபூ தாவூத்) என்று ஸுன்னாவும் வலியுறுத்தக் காணலாம்.

தற்காலத்தில் கல்வியறிவு மற்றும் தொழில் விருத்திக்கு கொடுக்கப்படும் முக்கியத்துவம் ஒழுக்கம் சார் விடயங்களில் மங்கிக் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைள் மற்றும் அறபு

மொழி பீடத்தின் இளம் பட்டதாரிகளின் நாளாந்த நடவடிக்கைகளை அவதானிக்கும் போது தண்ணீர் விரயம், மின்சார விரயம் மற்றும் பொதுச் சொத்துக்களைப் பாதுகாப்பதில் பொடுபோக்குத் தன்மை மற்றும் பொதுநலன் பேணும் விடயங்களில் கரிசனை காட்டாமை போன்றவற்றைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்விடயங்கள் இக்கல்விச் சமூக மட்டத்தில் எந்தளவு தூரம் உள்ளது என்பதைக் காணுமுகமாகவே இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வுப் பிரச்சினை**

முஸ்லிம் மாணவர்களை முழுமையாகக் கொண்ட இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தில் மாணவர்களின் ஒழுக்கமானது மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. சமூகத்தை வழிநடத்தக்கூடிய சன்மார்க்க அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகள் நிரம்பப் பெற்ற இப்பீடத்தில் பொதுசலன்சார் ஒழுக்கமானது உயர்வாகப் பேணப்பட வேண்டிய ஒன்றாக விளங்குகின்றது. ஆனால் சமகால நடைமுறையை கவனத்திற் கொண்டு நோக்கும் போது இம்மாணவர்களின் பொது நலம் சார்ந்த ஒழுக்கமானது உயர்வாகக் கடைபிடிக்கப்படுகின்றதா என்ற ஐயப்பாடு நிலவுகின்றது. எனவே, இவற்றைக் கருத்திற் கொண்டே இவ்வாய்வானது முன்னெடுக்கப்பட்டது.

**ஆய்வின் நோக்கம்**

இவ்வாய்வு பின்வரும் ஆய்வு நோக்கங்களைக் கொண்டமைந்துள்ளது.

- ✓ இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தினது மாணவர்களின் பொதுநலன்சார் ஒழுக்கங்கள் மற்றும் அவை சார்ந்த நடத்தைகள் எந்த அளவில் காணப்படுகிறது என்பதனைக் கண்டறிதல்.
- ✓ சன்மார்க்க அறிஞர்கள் (ஆலிம், ஆலிமாக்கள்) பெரும்பான்மையாகக் கல்வியைத் தொடர்கின்ற இப்பீடத்தில் பொதுநலன்சார் ஒழுக்கங்களில் அவர்கள் முன்மாதிரிமிக்கவர்களாக இருக்கின்றார்களா என்பதை மதிப்பிடுதல்.
- ✓ பொதுநலன்சார் ஒழுக்கங்களைக் கைக்கொள்வதில் அல்லது புறக்கணிப்பதில் பால்வேறுபாடு காணப்படுகின்றதா என்பதைக் கண்டறிதல்.
- ✓ பொதுநலன்சார் ஒழுக்கங்களை விருத்தி செய்வதற்கான பரிந்துரைகளை முன்வைத்தல்.

**இலக்கிய மீளாய்வு**

ஒழுக்கம், பண்பாடு தொடர்பான நூல்கள், சஞ்சிகை ஆக்கங்கள், ஆய்வுக் கட்டுரைகள், சுற்றறிக்கைகள் மற்றும் கட்டுரைகள் போன்றவை அதிகளவில் காணப்படுகின்றன. ஆனால் பொதுநலன்சார் ஒழுக்கங்களில் இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்களது ஈடுபாடு தொடர்பான ஆய்வுகளைக் காணக்கிடைக்கவில்லை. எனவே, இதனைக் கருத்திற்கொண்டே இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீடத்தை மையமாகக் கொண்டு இக்கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வு வரையறை**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அறபு மொழிப் பீட மாணவர்ளை மாத்திரம் கொண்டு, அப்பீடமும் பீடத்தைப் சுற்றிய அமைவிடங்களும் ஆண் மாணவர்கள் மற்றும் பெண் மாணவர்களின் விடுதிகளும் (வில்லா-2) மற்றும் பொதுச் சிற்றுண்டிச்சாலை ஆகிய இடங்களை வரையறையாகக் கொண்டும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு அளவுசார் ஆய்வாகவும் முதல்நிலைத் தரவுகளை முதன்மையாகவும் இரண்டாம் நிலைத் தரவுகளை மிகக் குறைவாகவும் பயன்படுத்திய ஆய்வாகக் காணப்படுகின்றது. முதலாம் நிலைத் தரவுகளைப் பெறுவதற்காக நீண்ட அவதான முறைமை பயன்படுத்தப்பட்டுள்ளது. 27.09.2018 இலிருந்து 12.07.2019 வரையான 10 மாத காலப்பகுதியில் மாணவர்கள் மிக இரகசியமாகவும் அவதானமாகவும் கண்காணிக்கப்பட்டு, பெறப்பட்ட தகவல்கள் குறிப்பிட்ட தரவுநிரல்களில் பதிவு செய்யப்பட்டன. இரண்டாம்

நிலைத் தரவுகள் புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள், இணையத் தகவல்கள் ஊடாகப் பெறப்பட்டன.

**இந்த ஆய்விற்கான தரவுகள் பின்வரும் எட்டு சுட்டிகளை அவதானிப்பதனூடாகப் பெறப்பட்டன:**

1. குறிப்பிட்ட பணத் தொகை வழியில் வீழ்ந்திருக்க, அதனை எடுத்து எவ்வாறு கையாள்கின்றார்கள் என்பதை அவதானித்தல்.
2. பாதையில் இடையூறு விளைவிக்கும் பொருட்கள் இருந்தால் அவற்றை அகற்றி விட்டுச் செல்லும் எண்ணம் உள்ளதா என அவதானித்தல்.
3. அங்கவீனர்கள், பலவீனர்கள், கஷ்டத்திலிருப்போருக்கு உதவும் மனநிலை உண்டா என ஆய்வு செய்தல்.
4. Tip switch பெட்டி திறந்திருந்தால் அது பிறருக்கு ஆபத்தை ஏற்படுத்திவிடக்கூடும் என்பதைக் கருத்திற் கொண்டு உரிய முறையில் அதனை மூடிவிட்டுச் செல்கின்றார்களா எனக் கண்காணித்தல்.
5. வாழைப்பழத் தோல், முள் போன்றவற்றை அகற்றும் எண்ணம் உண்டா எனப் பார்த்தல்.
6. மின்விசிறி, மின்குமிழ் போன்றவை தேவையின்றிப் பயன்படுத்தப்படும் போது அவற்றை அணைத்து விட்டுச் செல்ல வேண்டும் என்ற மனோநிலை உண்டா என அவதானித்தல்.
7. தண்ணீர் விரயமாகுவதைத் தவிர்க்கும் பண்பாடு உள்ளதா என ஆய்வு செய்தல்.
8. குப்பைத் தொட்டியில் குப்பையை போடும் மனப்பாங்கு இருக்கிறதா என ஆய்வு செய்தல்.


இவ்வாறு நேரடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட முதலாம் நிலைத் தரவுகள் MSWord மற்றும் MS Excel ஆகிய மென்பொருள் அலகுகள் மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு, ஆய்வு முடிவுகள் பெறப்பட்டன.

**கலந்துரையாடலும் கண்டறிதலும்**

பொதுநலன்சார் ஒழுக்கங்களில் பாதையில் வீழ்ந்திருந்த பணத்தை உரியவரிடம் மீள அளிக்கின்ற பண்பாடு காணப்படுகின்றதா என ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. இதில் 90 மாணவர்கள் அவதானிக்கப்பட்டனர். அவர்களுள் 36 ஆண் மாணவர்களும் 54 பெண் மாணவிகளும் அடங்குவர். ஆலிம்களும் ஆலிம்கள் அல்லாதவர்களும் அவர்களுள் காணப்பட்டனர். கடந்து சென்ற 90 பேரில் பணத்தை எடுத்து உரியவரிடம் ஒப்படைத்தோர் 18 (20%) பேராவர். இவ்விடயத்தில் பால்வேறுபாட்டையோ மார்க்க அறிவு வேறுபாட்டையோ பாரியளவில் எம்மால் காண முடியவில்லை. (பார்க்க: வரைபடம் 1)

**வரைபடம் 1**

வீழ்ந்திருந்த பணத்தை மீளளித்தல்.





மூலம்: ஆய்வுக்கான தரவு சேகரிப்பு – 2018, 2019

பாதையில் நடந்து செல்லும் போது பிறருக்கு இடையூறு விளைவிக்கும் பொருட்களை அகற்றிச் செல்வது ஓர் உயர்ந்த இஸ்லாமிய பண்பாடும் பொதுநல ஒழுக்கமுமாகும். இப்பண்பாடு எந்தளவு முஸ்லிம் மாணவர்கள் மத்தியில் காணப்படுகிறது என அவதானிக்கப்பட்டது. அந்தவகையில் 370 மாணவர்கள் அவதானிப்புக்குள்ளாகினர். அவர்களுள் 122 (33%) ஆண் மாணவர்களும் 248 (67%) பெண் மாணவிகளும் உள்ளடங்குவர். ஆண் மாணவர்களுள் 48 (39%) ஆலிம்களாவர். பெண் மாணவிகளுள் 108 (44%) ஆலிமாக்களாவர். ஆனால் பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்களை அகற்றிவிட்டுச் சென்றோர் 76 (21%) மாத்திரமேயாவர். அவர்களுள் பெண் மாணவர்கள் [58 (76%)] இதில் கூடுதல் ஈடுபாடு காட்டியுள்ளனர். குறிப்பாக ஆலிம்களல்லாதோரின் ஈடுபாடு இவ்விடயத்தில் துல்லியமாகத் தெரிகின்றது. (பார்க்க: வரைபடம் 2)

வரைபடம் 2

இடையூறு விளைவிக்கும் பொருட்களை அகற்றுதல்.





மூலம்: ஆய்வுக்கான தரவு சேகரிப்பு – 2018, 2019

அங்கவீனர்கள், பலவீனர்கள் மற்றும் கஷ்டத்திலிருப்போருக்கு உதவும் மனோநிலை மாணவர்கள் மத்தியில் எவ்வாறு இருக்கின்றது என 65 மாணவர்களை வைத்து ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. அவர்களுள் 48 (74%) மாணவர்களும் 17 (26%) மாணவிகளும் அடங்குவர். ஆலிம்கள், ஆலிம்களல்லாதோர் முறையே 27 (56%), 21 (44%) என்ற விகிதாசாரத்திலும் ஆலிமாக்கள், ஆலிமாக்களல்லாதோர் முறையே 05 (29%), 12 (71%) என்ற விகிதாசாரத்திலும் அமைந்திருந்தனர். இப்பொதுநலன் பேணும் பண்பு மொத்தமாக 15 (23%) பேரிடம் மாத்திரமே காணக்கிடைத்தது. ஆண், பெண் வேறுபாட்டையோ மார்க்க அறிவு வேறுபாட்டையோ இத்தரவுகளிலிருந்து காணக் கிடைக்கவில்லை. (பார்க்க: வரைபடம் 3)

வரைபடம் 3

அங்கவீனர்கள், பலவீனர்கள் மற்றும் கஷ்டத்திலிருப்போருக்கு உதவியோர்.





மூலம்: ஆய்வுக்கான தரவு சேகரிப்பு – 2018, 2019

அடுத்த மனிதர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய பொருட்களை அகற்றும் மனப்பாங்கு உள்ளதா என ஆய்வு செய்வதற்காக பீடத்திலுள்ள Tip Switch பெட்டிகள் பயன்படுத்தப்பட்டன. அதற்காக திறந்திருந்த Tip switch பெட்டிகளை, அவை பிறருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதைக் கருத்திற் கொண்டு, உரிய முறையில் அதனை மூடிவிட்டுச் செல்கின்றார்களா என்பது கண்காணிக்கப்பட்டது. அந்தவகையில் ஆய்வு செய்யும் வேளைகளில் 294 மாணவர்கள் அப்பெட்டிகளைக் கடந்து சென்றனர். அவர்களுள் மாணவர்கள் 84 (29%) பேர். மாணவிகள் 210 (71%) பேர். 84 மாணவர்களுள் 58 (60%) ஆலிம்களும் 26 (40%) ஆலிம்களல்லாதோரும், 210 மாணவிகளுள் 109 ஆலிமாக்களும் (52%), 101 ஆலிமாக்களல்லாதோரும் (48%) உள்வாங்கப்பட்டிருந்தனர். ஆனால் அவற்றை உரிய முறையில் மூடிவிட்டுச் சென்றோர் வெறும் 30 (10%) பேர் மாத்திரமேயாவர். அவர்களுள் 7 (23%) ஆண்களும் 23 (77%) பெண்களும் இதில் ஈடுபாடு காட்டியிருந்தனர். மாணவிகள் இவ்விடயத்தில் சற்றுக் கூடிய கவனம் செலுத்துவதாகத் தெரிகின்றது. உரிய முறையில் மூடிச் சென்ற 7 ஆண் மாணவர்களுள் 6 (86%) பேர் ஆலிம்களாக இருந்தமை இங்கு ஈன்று கவனிக்கத்தக்கது. (பார்க்க: வரைபடம் 4)

வரைபடம் 4

Tip Switch பெட்டி திறந்திருக்க, அது பிறருக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதைக் கருத்திற் கொண்டு, உரிய முறையில் அதனை மூடிவிட்டுச் செல்லல்.





மூலம்: ஆய்வுக்கான தரவு சேகரிப்பு – 2018, 2019

பாதையில் பயணிக்கும் போது பயணிகளுக்குத் தீங்கு ஏற்படுத்தக் கூடிய கற்கள், எழும்புகள், முட்கள், பழத் தோல்கள், ஆணிகள் மற்றும் கண்ணாடித் துண்டுகள் போன்றவற்றை அகற்றிச் செல்வது ஒரு முஸ்லிமின் மிக எளிமையான பண்பாடு மாத்திரமன்றி அது ஒரு சிறந்த தர்மம் என்பது இறை தூதரின் வாக்காகும். இப்பண்பாடு மாணவர்களிடையே எவ்வாறு காணப்படுகின்றது என்பதை அவதானிப்பதற்காக வாழைப்பழத் தோல், முள் என்பவற்றைக் கடந்து செல்லும் 166 மாணவர்கள் கண்காணிக்கப்பட்டனர். அவர்களுள் 69 பேர் (42%) மாணவர்களாகவும் 97 பேர் (58%) மாணவிகளாகவும் காணப்பட்டனர். கடந்து சென்ற 69 மாணவர்களுள் 51 பேர் (74%) ஆலிம்களாகவும் 18 பேர் (26%) இருந்த அதேவேளை கடந்து சென்ற 97 மாணவிகளுள் 50 பேர் (52%) ஆலிமாக்களாகவும் ஏனையோர் (47 பேர், 48%) ஆலிமாக்களல்லாதோராகவும் காணப்பட்டனர். இப்பொது ஒழுக்கத்தைப் பொருத்தளவில் மிகக் குறைவான தொகையினரே (12 பேர், 7%) அதில் கரிசனை செலுத்தியுள்ளனர். குறிப்பாக மாணவிகள் 4 பேர் (4%) இவ்விடயத்தில் மிகவும் கரிசனையற்றிருப்பது கண்டறியப்பட்டது. (பார்க்க: வரைபடம் 5)

வரைபடம் 5

வாழைப்பழத் தோல், முள் போன்றவற்றை அகற்றிச் செல்லல்





மூலம்: ஆய்வுக்கான தரவு சேகரிப்பு – 2018, 2019

வீண்விரயம் இஸ்லாத்தில் வெறுக்கப்பட்ட, கண்டிக்கப்பட்ட ஒரு செயலாகக் காணப்படுகின்ற அதேவேளை பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் விடயத்தில் கவனம் செலுத்துதலும் அவசியமாகும். இவ்விரண்டையும் இணைத்ததாக மின்விசிறி, மின்குமிழ் போன்றவை தேவையின்றிப் பயன்படுத்தப்படுகின்ற போது மாணவர்கள் எவ்வாறான துலங்கல்களை வெளிப்படுத்துகின்றார்கள் என ஆய்வுக்குட்படுத்தப்பட்டது. 388 மாணவர்கள் (192 ஆண்கள் மற்றும் 196 பெண்கள்) இதில் அவதானிக்கப்பட்டனர். 192 ஆண் மாணவர்களுள் 116 (60%) பேர் ஆலிம்களாவர். ஆலிம்களல்லாதோர் 76 (40%) பேராவர். அத்தோடு 196 பெண் மாணவர்களுள் 101 (52%) பேர் ஆலிமாக்களாவர். ஏனைய 95 (48%) பேர் ஆலிமாக்களல்லாதோராவர். தேவையின்றிப் பயன்படுத்தப்படும் மின்சாதனங்களை அணைத்து விட்டுச் சென்றோர் வெறும் 19 (4.9%) பேர் மாத்திரமேயாவர். அவர்களுள் பெண் மாணவிகள் மிகவும் பின்தங்கிய நிலையிலிருப்பது (2 பேர், 0.6%) கண்டறியப்பட்டுள்ளது. (பார்க்க: வரைபடம் 6)

வரைபடம் 6

மின்விசிறி, மின்குமிழ் போன்றவை தேவையின்றிப் பயன்படுத்தப்படும் போது அவற்றை அணைத்து விட்டுச் செல்லல்.





மூலம்: ஆய்வுக்கான தரவு சேகரிப்பு – 2018, 2019

வீண்விரயம், பொதுச் சொத்துக்களைப் பாதுகாத்தல் தொடர்பாக இன்னொரு வகையிலும் ஆய்வு செய்யப்பட்டது. விரயமாகும் தண்ணீரை நிறுத்துவதற்கான முயற்சிகளில் மாணவர்கள் ஈடுபாடு காட்டுகின்றார்களா எனப் பார்க்கப்பட்டது. அதற்காக 365 மாணவர்கள் பரிசீலிக்கப்பட்டார்கள். அவர்களுள் 252 (69%) ஆண்களும், 113 (31%) பெண்களும் உள்ளடங்கியிருந்தனர். 252 ஆண் மாணவர்கள், 91 (36%) ஆலிம்கள் மற்றும் 161 (64%) ஏனையோர் என அமைந்திருந்தனர். அதேபோன்று 113 பெண் மாணவிகள், 55 (49%) ஆலிமாக்கள் மற்றும் 58 (51%) ஏனையோர் எனக் காணப்பட்டனர். வரைபடம் 7 இன்படி மொத்த மாணவர்களுள் தண்ணீர் விரயமாவதைக் கண்டு, மூடிவிட்டுச் சென்றோர் 58 (16%) பேராவர். பால்வேறுபாடு இங்கே துல்லியமாகத் தோன்றாவிட்டாலும் ஆலிமாக்களை விட ஆலிமாக்களல்லாதோர் இதில் கூடுதல் கவனம் செலுத்தியிருப்பது தெரிய வந்தது.

வரைபடம் 7

தண்ணீர் விரயமாகுவதைக் கண்டு, மூடிவிட்டுச் செல்லல்.





மூலம்: ஆய்வுக்கான தரவு சேகரிப்பு – 2018, 2019

தற்காலத்தில் குப்பையை உரியமுறையில் அகற்றுதல் ஒரு சமூக ஒழுக்கமாகவும் பொது நலன் பேணும் கைங்கரியமாகவும் கருதப்படுகின்றது. பல்கலைக்கழகச் சூழலில் இது எவ்வாறு அமுலாகின்றது என 162 மாணவர்களை மையப்படுத்தி ஆய்வு செய்யப்பட்டது. வரைபடம் 8 மற்றும் 9இன் அடிப்படையில், இவ்விடயத்தில் ஆண், பெண் வேறுபாட்டையோ ஆலிம், ஆலிமல்லாதவர் என்ற வேறுபாட்டையோ பிரத்தியட்சமாகக் காண முடியாதுள்ளதுடன் ஏனைய பொதுநல ஒழுக்கங்களை விட இவ்விடயத்தில் மாணவர்கள் கூடுதல் கரிசனை செலுத்தியிருப்பது இங்கு ஈன்று கவனிக்கத்தக்கது.

வரைபடம் 8


குப்பையை உரிய முறையில் அகற்றியோர் மற்றும் அகற்றாதோர் (ஆண்கள்).




மூலம்: ஆய்வுக்கான தரவு சேகரிப்பு – 2018, 2019

வரைபடம் 9

குப்பையை உரிய முறையில் அகற்றியோர் மற்றும் அகற்றாதோர் (பெண்கள்)




மூலம்: ஆய்வுக்கான தரவு சேகரிப்பு – 2018, 2019

எமது இவ்வாய்விற்காக இளம் பட்டதாரி மாணவர்களில் 1912 மாணவர்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். அவர்களில் ஆண்கள் (904, 47%) பெண்கள் (1008, 53%) என்ற விகிதத்தில் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டனர். ஆண் மாணவர்களுள் 462 பேர் ஆலிம்களாகவும் 482 பேர் ஆலிமல்லாதோராகவும் காணப்பட்டதோடு மாணவிகளுள் 539

பேர் ஆலிமாக்களாகவும் 520 பேர் ஏனையோராகவும் இருந்தனர். பெறப்பட்ட தரவுகளினடிப்படையில் மொத்தமாக 316 (16.5%) பொதுநலன்சார் ஒழுக்கங்களைக் கடைபிடிக்கக் கூடியவர்களாகக் காணப்பட்டனர். இதில் பால்வேறுபாடு பாரியளவில் செல்வாக்குச் செலுத்தவில்லை. இது ஒரு சமூகத்தைப் பொருத்தளவில் ஒழுக்க வீழ்ச்சியைக் காட்டக் கூடிய ஒரு குணங்குறியாகும். புத்திஜீவிகளான பல்கலைக்கழக சமூகத்தில் 83.5% வீதத்தினர் பொதுநல ஒழுக்கங்களில் கரிசனையற்றிருப்பது ஒழுக்கப் பலவீனத்தை பறைசாற்றுவது மட்டுமன்றி மிகப் பாரதூரமான பின்விளைவுகளை ஏற்படுத்தவல்லதுமாகும். அதிலும் குறிப்பாக மார்க்கச் சட்டங்களையும் ஒழுக்க விழுமியங்களையும் கற்றுத் தேர்ந்த, பிறருக்கு முன்மாதிரியான நடத்தைகளை வெளிக் கொண்டுவர வேண்டிய ஆலிம்களும் ஆலிமாக்களும் மேற்குறிப்பிடப்பட்ட சுட்டிகளில் 14% ஐ மாத்திரம் அடைந்திருப்பதன் கருத்தாவது 85% இற்கும் அதிகமான ஆலிம்களும் ஆலிமாக்களும் பொதுநல ஒழுக்கங்களில் கவனம் செலுத்துவதில்லை என்பதாகும். இந்நிலை முஸ்லிம் சமூகத்திற்கு ஆரோக்கியமானதன்று.

மேலே குறிக்கப்பட்ட கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் பல்கலைக்கழக மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் கூடிய கவனம் செலுத்துவதோடு பொதுநலன்சார் ஒழுக்கங்களிலுமும் நடத்தைகளிலும் தீவிர அக்கறை காட்டுவதும அவசியமானதாகும். அத்தோடு அச்செயற்பாடுகளை அமுல்படுத்துவதனூடாக எதிர்காலத்தில் ஒரு சிறந்த ஒழுக்கம் நிறைந்த சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடிவதோடு அது தேசிய மற்றும் சமூக நல்வாழ்வுக்குத் துணையாக அமைய வல்லது.

**விதந்துரைகள்**

ஆய்வுக்குட்படுத்திய பீடத்தின் இளம்பட்டதாரிகளிடத்தே மிக இரகசியமாகவும் அவதானமாகவும் கண்டறியப்பட்ட ஒழுக்கம் சார் நடத்தைகளை அவதானிக்கும் போது எதிர்பார்த்த அடைவ மட்டத்தில் இருந்து பின்தங்கியே உள்ளார்கள் என்று அறியக்கிடைக்கிறது.

இதனடிப்படையில் இவ்வாறான ஆய்வின் தரவுகளைக் கருத்திற் கொண்டு இப்பிரச்சினைக்கான தீர்வுகளாகப் பின்வரும் முன்மொழிவுகளை முன்வைக்கின்றோம்.

- ✓ பல்கலைக்கழக மாணவர்கள் சமுதாயத்துக்குள்ளேயிருந்து வருவதனால் அச்சமுதாய மட்டத்தில் சீர்திருத்தங்கள் செய்யப்படல் வேண்டும். பள்ளிவாசல்கள், பாடசாலைகள், சீர்திருத்த அமைப்புக்கள் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்துவதோடு, ஆக்கபூர்வமான நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்தல்.
- ✓ இளம்பட்டதாரிகள் மத்தியில் ஆற்றுப்படுத்தல் கருத்தரங்குகளை நடத்துதல்.
- ✓ முஸ்லிம் மஜ்லிஸ், மாணவர் நலன்பேணும் துறை போன்ற பல்கலைகழக அமைப்புக்கள் ஊடாக தெளிவூட்டல் நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு மன்றங்களை நடாத்துதல்.
- ✓ ''சூழலைப் பாதுகாத்தல்'' எனும் தொனிப்பொருளின் கீழ் பயிற்சிப் பாசறைகளை மற்றும் ஒரு நாள் வேலைத்திட்டங்களை நடத்துதல்.

**உசாத்துணைகள்:**

அல்குர்ஆன்
அபூ தாவூத்
ஸஹீஹ் முஸ்லிம்